குழந்தைகளுக்கு வேதாகமம்
வழங்குபவர்

# இயேசு பன்னிரெண்டு பேரை உதவிசெய்வதற்காக தெரிந்துகொண்டார்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Byron Unger; Lazarus
Alastair Paterson

தழுவியவர்: E. Frischbutter; Sarah S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2022 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி
உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

இயேசு ஆச்சரியமான காரியங்களை செய்தார். இயேசு வியாதியை சுகமாக்கினார், கஷ்டப்பட்ட மக்களுக்கு மனதிலே, இருதயத்திலே சமாதானத்தை கொடுத்தார், மற்றும் தேவனுடைய வார்த்தையை போதித்தார்.



உதவியும், சுகமும் பெற,
திரளான ஜனங்கள் இயேசுவிடம்
வந்தார்கள்.



தன்னைப் பின்பற்றி வருகிறவர்களில் பன்னிரெண்டு பேரை தெரிந்து கொண்டு, தன்னுடைய வேலையில் உதவி செய்ய வைத்துக்கொள்ள முடிவு செய்தார்.



நீங்கள் மிகவும் முக்கியமான முடிவு எடுக்கும்போது, தேவனிடத்தில் வேண்டுதல் செய்வீர்களா? இயேசு செய்தார்! அமைதியான மலைப்பகுதிக்கு சென்று, தன்னுடைய பரலோக பிதாவினிடத்தில் பேசினார். சூரியன் அஸ்தமிக்கும்வரை இயேசு செய்தார்.




இயேசு இரவு
முழுவதும்
இருட்டிலே
ஜெபித்தார்.



காலையிலே, தனக்கு ஊழியம் செய்து கீழ்ப்படிந்த நண்பர்களையெல்லாம் தன்னை பின் செல்பவர்களாக அழைத்தார். அவர்களில் பன்னிரெண்டு பேரை தனக்கு உதவிக்காரர்களாக அல்லது அப்போஸ்தலராக தெரிந்து கொண்டார்.

சீமோன் பேதுரு மற்றும் அந்திரேயா,
என்ற சகோதரர்களை இயேசு முதலாவதாக
தெரிந்தெடுத்தார். முதலாவதாக இயேசு தங்களை
அழைத்தபோது, தங்களுடைய மீன் பிடிக்கிற
வேலையை விட்டுவிட்டு இயேசுவை
பின்பற்றினார்கள்.



யாக்கோபும், யோவானும், செபதெயுவின் குமாரர்கள், தங்களுடைய மீன் வலையை விட்டுவிட்டு அவர்களும் பின் சென்றார்கள்.



பிலிப்பு, பர்த்தொலேமேயு, மத்தேயு, தோமா,
செலோத்தே என்னப்பட்ட சீமோன், அல்பேயுவின்
குமாரன் யாக்கோபு, யாகோபுவின் குமாரனாகிய
யூதா மற்றும் இயேசுக்கு
எதிரியாக மாறிய
யூதாஸ்காரியோத்து.




இயேசு போதித்தது என்னவென்றால் ஒருவன்
அவருடைய வார்த்தையை கேட்டு அதன்படி
செய்தால், வீட்டை திடமான அஸ்திபாரத்தில்
கட்டுவதற்கு சமம். கடும்
புயல் காற்று வீசினாலும்
அந்த வீட்டை
இடிக்கமுடியாது.

அவருடைய வார்த்தையை கேட்டு அதின்படி செய்யாதவர்கள் மணலை அஸ்திபாரமாக வைத்து வீடு கட்டுபவர்களுக்கு சமானம். கடும் புயல் வீசும்போது அந்த வீடு இடிந்துபோகும்.



இயேசு கற்பித்த சில கட்டளைகள் கஷ்டமாக இருந்தன, "உன்னை ஒருவன் வலது கன்னத்தில் அடித்தால் அவனுக்கு இடது கன்னத்தையும் காட்டு," என்று போதித்தார். "உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்." இயேசுவைப் போல வாழ்வதற்கு மக்களுக்கு தேவனுடைய உதவி தேவை.



சில மதகுருக்கள் தங்கள் ஜெபத்தை மற்றவர்கள் காண காண்பிப்பதுபோல, நீங்கள் செய்யாதீர்கள். உங்கள் வேண்டுதல் இரகசியமாயிருக்கட்டும் என்று இயேசு சொன்னார்.



தேவன் தம்மை
நம்புகிறவர்களை
உணவளித்து,
உடுத்துவிப்பார்
என்று இயேசு
சொன்னார்.



தேவன் ஆகாயத்து
பறவைகளுக்கு
உணவையும், பூவுக்கும்
செடிகொடிகளுக்கும்,
வண்ணத்தையும்
கொடுப்பதினாலே, தேவனுடைய
பிள்ளைகள் தங்களுடைய
தேவைகளுக்காக தேவனை
விசுவாசிக்கலாம் என்றார்.





தன்னாலே புதிதாக
தெரிந்தெடுக்கப்பட்ட
உதவியாளர்களுக்கு இயேசு
அனேக பாடங்களை அன்று
கற்பித்தார். அவர் போதித்த பின்பு,
குஷ்டரோகியான மனிதன்,
தன்னை குணமாக்கும்படி
இயேசுவிடம் வேண்டினான்.


"எனக்கு சித்தமுண்டு சுத்தமாகு" என்று இயேசு
குஷ்டரோகிக்கு பதில் கொடுத்தார். அவருடைய
உதவியாளர்கள் பார்த்துக்கொண்டிருந்தபோது,
குஷ்டரோகி முழுவதுமாக
சுகம் பெற்றான். அவன்
சுகமானான்! தேவனுடைய
குமாரனால் மாத்திரம்தான்
இதைச் செய்யமுடியும்.
தங்களுக்கு அற்புதமான
ஒரு தலைவர் இருக்கிறார்
என்று அவருடைய
உதவியாளர்கள்
அறிந்து
கொண்டார்கள்.

# இயேசு பன்னிரெண்டு பேரை உதவிசெய்வதற்காக தெரிந்துகொண்டார்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

மத்தேயு 4-7, மாற்கு 1, லூக்கா 6

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130



முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16